இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,579 — SEPTEMBER 5, 1913.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[By-law relating to Poultry Mart, made by the Colombo Municipality.]

பெரிய பிரித்தானியாவினதும் ஐயர்லந்தினதும் ஐக்கிய இராச்சியத்துக்கும், சமுத்திரங்களுக்கப்பாலுள்ள பிரித்தானிய இராச்சியங்களுக்கும் அரசரும் வேத பாதுகாவலருமாகிய மகா மாட்சிமை பொருந்திய ஐந்தாவது ஜோர்ஜ் அவர்களின் நாமத்தில்:

இலங்கைத்தீவினதும் அதைச்சார்ந்த பராதீன நாடுகளினதும் அரசாங்கத்தை நடத்தற்குச்
சர்வாதிகாரம் பெற்றுள்ளவராகிய மகோத்தமர் றெஜினோல்ட் எட்
வேட் ஸ்தப்ஸ்துரை அவர்களால் செய்யப்படும்

## பிரசித்தம்.

றெஜினோல்ட் எட்வேட் ஸ்தப்ஸ்,

1910 ம் ஆண்டின் 6 ம் இலக்கமுள்ள நகரசங்கக் கட்டளைச் சட்டத்தின் 109 (1), 110 (8) (c) ம் பிரிவின் நிபந்தனைகளின்கீழ் கொழும்பு நகரசங்கத்தால் கீழே காணப்படும் உபசட்டம் செய்யப்பட்டு, மேற்குறித்த கட்டளைச்சட்டத்தின் 109 (3) ம் பிரிவின் அமைப்பின்படி மந்திர நிருவாக சபையோடுகூடிய தேசாதிபதி அவர்களால் உறுதி செய்யப்பட்ட அந்த உண்மையால்;

யாவரும் அறியத்தக்கது, சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 109 (3) என்னும் பிரிவினால் நிலைப்படுத்தப்பட்ட தத்துவத்தின் பெலனைக்கொண்டு இலங்கை அரசாங்கத்தை நடத்தற்குச் சர்வாதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் அவர்களால் சொல்லப்பட்ட உபசட்டம் இத்தால் பிரசித்தம்செய்யப்படுகிற தென்பதேயாம்.

எங்கள் கர்த்தரின் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதின்மூன்றும் ஆண்டு செப்ரெம்பர்மாசம் மூன்றாந் தேதியாகிய இன்று இந்த இலங்கைத் தீவிலுள்ள கொழும்பில் கொடுக்கப்பட்டது.

மகோத்தமரின் கட்டளைப்படி,

எல். டபிள்யு. பூத்,
அயிட்டிங் கலோனியல் சக்கிறுத்தார்.

தேவன் அரசரை இரட்சிப்பாராக.

---

சொல்லப்பட்ட உபசட்டமாவது.

அக்கிராசனரிடம் வருடாந்த உத்தரவுப் பத்திரம் பெறாமல் எவராவது எந்த இடத்திலாவது வளர்க்கப்படும் சீவனுள்ள கோழி முதலிய பறவைகளைச் சந்தையைப்போல் வைத்து விற்பனவு செய்தால் அது கட்டளைச்சட்டத்துக்கு விரோதமாகும்.

---

# LAND SALES.

## காணி விற்பனவுகள்.

**No. 708, N. P.**—1913 ம் ஆண்டு ஐப்பசிமாதம் 14 ந் திகதி, செவ்வாய்க்கிழமை, காலமே 11 மணியளவில், தன் ஆபீசில், வட மாகாணத்து கவண்மேந்து ஏசன்றவர்களால், இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது உரித்து முடிவு செய்யப்படும். 13 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் தென்மராட்சி முதலிய பகுதியிலிருக்கின்றது.

படம் 4,074. உரித்தாளி—இல்லை.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. று. ப. | எக்கரொன்றின் பாணிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1314 | கச்சாய் | — | ஒழுங்கைக்காக விடப்பட்ட நிலம், காடு | 0 1 19 | — |
| | | உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 1315 | ஷை | கே. வேலுப்பிள்ளை | காடு | 1 1 12 | 50 |
| 1316 | ஷை | ஷை | காடு | 6 2 20 | 25 |
| | | உரித்தாளி—நாகன் பெண் வள்ளி கூட்டிச்சேர்த்தது. | | | |
| 1317 | ஷை | கே. வேலுப்பிள்ளை | தென்னந்தோட்டம் | 0 1 16 | 120 |

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | | | ஏக்கரொன்றின் பாணிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 4,046. | உரித்தாளி—அரசாட்சி. | | | | |
| 1252 | கரணவாய் தெற்கு | — | தரிசுநிலம் | 5 | 0 | 6 | 16 |
| 1253 | ஷை | — | கந்தையா சுப்பர் கூட்டிச்சேர்த்தது | 1 | 3 | 22 | 16 |
| | | பிளான் இலக்கம் 4,054. | உரித்தாளி—சீ. நாகமுத்து கூட்டிச்சேர்த்தது. | | | | |
| 1277 | கிராஞ்சி | — | நெல் வயல் | 1 | 1 | 7 | 40 |
| | | பிளான் இலக்கம் 4,035. | உரித்தாளி—சண்முகம் வேலுப்பிள்ளை கூட்டிச்சேர்த்தது. | | | | |
| 1211 | அம்பன் | — | நெல் வயல் | 0 | 1 | 38 | 15 |
| | | பிளான் இலக்கம் 4,079. | உரித்தாளி—அரசாட்சி. | | | | |
| 1329 | நாகர் கோவில் | என். கந்தப்பன் | காடு | 2 | 3 | 31 | 15 |
| | | பிளான் இலக்கம் 4,076. | உரித்தாளி—அரசாட்சி. | | | | |
| 1318 | வெட்டுக்காடு | — | ஒழுங்கைக்கு விடப்பட்ட நிலம் | 0 | 2 | 23 | — |
| 1319 | ஷை | வி. எம். முத்துக்குமாரு | காடு | 33 | 0 | 10 | 22·50 |
| 1320 | ஷை | — | சுடுகாட்டுக்கு விட்ட நிலம் | 6 | 0 | 30 | — |
| 1321 | ஷை | — | பாதைக்காக விடப்பட்ட நிலம் | 0 | 1 | 5 | — |

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் வடமாகாணம் கவுண்மேந்து ஏசன்றுத்துரையிடத்திலும் படங்களைப்பற்றி அளவு கந்தோரின் பெரியதுரையிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1913 ம் ௵ ஆகஸ்ற்மீ 28 ந் உ.

எல். டபிள்யு. பூத்,
அக்றிங் கொலோனியல் சக்கிறத்தார்.

---

# LAND ACQUISITION NOTICES.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Negombo, Colombo District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நீர்கொழும்பில் புதுக்கக் கட்ட எத்தனித்திருக்கும் தவ்வால் கந்தோருக்கு வேண்டிய இடத்துக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| | | பிரதமபடத்து இலக்கம் 15,428. | குறிச்சி—நீர்கொழும்பு. | | | |
| T 39 | சாப்புகாவத்தை | தென்னந்தோட்டம் | எம். மேறி வி. வாஸ் | 0 | 0 | 20·59 |
| U 39 | ஷை | ஷை | ஷை | 0 | 0 | 19·62 |
| V 39 | ஷை | ஷை | எம். ஆர். வாஸ் | 0 | 0 | 1·24 |
| W 39 | ஷை | ஷை | எம். எல். யி. கொஸ்ரா | 0 | 0 | 37·59 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி, 1876 ம் வருஷத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1913 ம் ௵ ஐப்பசிமாசம் 3 ந் தேதியிலன்று பின்நேரம் 1 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1913 ம் ௵ புரட்டாசிமீ 1 ந் உ.

எச். ஆர். பிறீமன்,
அரசாட்சி ஏசண்டுக்காக.

---

[Negombo, Colombo District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சிலாபத்துக்குப்போகும் றெயில் பாதைக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| | | பிரதமபடத்து இலக்கம் 15,447. | குறிச்சி.—நீர்கொழும்பு. | | | |
| I 10 | மீகாவத்தை | தென்னந்தோட்டம் | டன் அல்வேற் பெரேறுவுக்கும் இன்னும் ஒரு ஆளுக்கும் | 0 | 0 | 0·50 |
| J 40 | தலகாவத்த | தட்டையான நிலம் | டன் நோகு பெரேறு | 0 | 0 | 0·12 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1913 ம் ௵ ஐப்பசிமாசம் 3 ந் தேதியிலன்று பின்னேரம் 1 மணிக்கு கொழும்பு கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1913 ம் ௵ புரட்டாசிமீ 3 ந் உ.

எச். ஆர். பிறீமண்,
மேல் மாகாணம் அரசாட்சி ஏசண்டு.

[Dedunupitiya, Kandy District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தெதுனுப்பிற்றியா பள்ளிக்கூடத்தின் பாவிப்புக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 6,395. குறிச்சி—தெதுனுப்பிற்றியா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| M 42 | போககாமூலத்தென்ன அம் பலமேவத்தை .. | வாழைத் தோட்டம் .. | டபிள்யு. எம். டிங்கிரிபண்டாவும், ஏ. உமார்தீனும் .. | 0 0 29·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1913 ம் ௵ செப்றெம்பர் ௴ 27 ந் தேதியிலன்று பின்நேரம் 1 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1913 ம் ௵ செப்றெம்பர் ௴ 5 ௳.

ஜீ. எஸ். செக்ஸ்ரன்,
அரசாட்சி ஏசண்டு.

---

[Dikoya, Kandy District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தொப்பிதோட்டத் (ஹெட்டன்) திலிருந்து ராஜா தோட்டத் (நோர்வூட்) திற்கு போகும் பாதையை வேருக்கவேண்டியது என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 6,392. குறிச்சி—டிக்ஓயா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| J 42 | வணுருஜா தோட்டம் .. | தே .. | வணுருஜா தேதோட்டக் கம்பனி .. | 0 0 26·62 |
| K 42 | ஷை .. | தே .. | ஷை .. | 1 2 3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணிகளை எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச்சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1913 ம் ௵ செப்டம்பர் 27 ந் தேதியிலன்று பகல் 1 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1913 ம் ௵ செப்டம்பர் ௴ 5 ௳.

ஜீ. எஸ். செக்ஸ்ற்றன்,
அரசாட்சி ஏசண்டு.

---

[Wendala, Kegalla District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பகிரங்கவேலை டிபார்ற்மெண்டு கற்குழி ஒன்றுக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 2,365. குறிச்சி—வென்தல.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| A 29 | உடுபிட்டியேவத்த .. | தென்ன முதலிய உள்ள தோப்பு .. | காலம்சென்றுபோன ஈ. எவ். மாபிட்டிகம் இரட்டேமகத்தமயாவின் உரித்தாளர்களாகிய மத்துமா வண்டா, புஞ்சிமகத்மயாகோருளை, எம். எஸ். பண்டாற மகத்மயாவும் வண்டாற மணிக்கா .. | 0 1 38·87 |
| B 29 | கள்கொட்டுவேவத்த .. | ஷை .. | பத்திரன்னஹலாகே என்னிநோனு, கொனேவடுராலலாகே சுவன்தாஹாமி, கொனேவடுராளகே முதலிகாமி .. | 0 0 7·75 |
| C 29 | ஷை .. | ஷை .. | கொனேவடுராளலாகே புன்சிஎதன, கொனேவடுராளலாகே சின்னப்பு, வழக்கமகே முதலிகாமி .. | 0 0 13·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1913 ம் ௵ செப்றெம்பர் ௴ 30 ந் தேதியிலன்று பின்நேரம் 1 மணிக்கு கேகல்லை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகல்லைக் கச்சேரி,
1913 ம் ௵ செப்றெம்பர் ௴ 2 ௳.

எச். டபிள்யு. கொட்றிங்டன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

[Wedigune, Badulla District.]

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பகிரங்கவேலைக் கந்தோர் கூலிகளுக்கு லாயங் கட்டுவதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

வீ. எல். பிரதமபடத்து இலக்கம் 170. குறிச்சி—வெடிகுன.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 62*i*1 | குருந்துகெலே தோட்டம் .. | தேயிலையும் நப்பரும் 12 வருஷக் கன்று .. | கொழும்பு கொமேர்சல்கொம்பனி .. | 0 1 13·70 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1913 ம் ஆண்டு புரட்டாதிமாசம் 29 ந் தேதியிலன்று பின்னேரம் 1 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1913 ம் ஆண்டு ஆவணிமீ 27 ந் உ.

எவ். பாட்லெட்,
ஊவா அரசாட்சி ஏசண்டு.

---

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

### உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தலகளைக் குறித்த விளம்பரங்கள்.

[Kurunegala Notice No. 4,994.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாமிருந்தால், அவர்கள், 1913 ம் ஆண்டு (செப்டெம்பர்) புரட்டாசிமீ 5 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாகல் டிஸ்திறிக் கிரியாலகாறபத்துவைச்சேர்ந்த மகாகல்பொட ஏகொட கோறளையிலுள்ள நிக்கதலுபொத்த என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதம படம் 3,781.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 141 .. | ரூட்டுக்காரகச் சேமித்த நிலம் .. .. .. | 0 0 3 |
| 142 .. | ஷை .. .. .. .. | 0 0 36 |
| 143 .. | ஷை .. .. .. .. | 0 0 6 |
| 144 .. | ஷை .. .. .. .. | 0 0 21 |
| 145 .. | ஷை .. .. .. .. | 0 0 3 |
| 146 .. | ஷை .. .. .. .. | 0 2 5 |
| 147 .. | ஷை .. .. .. .. | 0 0 32 |
| 148 .. | ஷை .. .. .. .. | 0 3 15 |
| | | 2 0 1 |

எல்லைகளாவன : வடக்கு-தெனக்கோன் றற்றேமகாத்மேயா உருத்தாடும் நிக்கதலுபொத்த; கிழக்கு-முடி உருத்தாடும் நிக்கதலுபொத்தகேன்யாய; தெற்கு-முடி உருத்தாடும் நிக்கதலுபொத்தகேன்யாய, முடிக்குரிய கிரிபிற்றிய ஆஸ்பத்திரியும் தோட்டமும்; மேற்கு-ஆறச்சிருலகெதற பின்காமியும் மற்றவர்களு முரித்தாடும் ஆஸ்பத்திரி தோட்டம், ஆருச்சிருலகெதற பின்காமியும் மற்றவர்களு முரித்தாடும் நிக்கதலுபொத்த, தெனக்கோன் றற்றேமகாத்மேயா உருத்தாடும் நிக்கதலுபொத்த.

* இங்கிலிசின் நான்காம் பாகம் 1286 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Kurunegala S. O. 227, 1912—1913.]

---

[Kurunegala Notice No. 4,995.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1913 ம் ஆண்டு (செப்றெம்பர்) புரட்டாசிமீ 5 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிரியாலேகாற்பற்றைச்சேர்ந்த இகாலவிசிடிகேக் கோறளேயில் கல் கெற்றிகம என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனணேக்கப்படும் *படப்பிரதியில் விபரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித் துண்டுகள் :—

பிரதம படம் 1,880.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| U 829*a* | பாற (ரோட்டு) | 0 0 18 |
| W 829*a* | ஷை | 0 1 12 |
| | | 0 1 30 |

எல்லைகளாவன : வடக்கு-முடிக்குரிய வினிவேகெறவெலபில்லெவவும், கொற்றகாகும்புறவும்பிறவும், முடிக்குரிய மீகாகும்புறபில்லெவ, முடிக்குரிய வினிவேகெறவெலபில்லெவவும் கொற்றகாகும்புறவும் பிறவும்; கிழக்கு-முடியால் விற்கப்பட்ட வினிவேகெருகேவெலபில்லெவ; தெற்கு-பன்னலக் கிராம எல்லை, முடியால் விற்கப்பட்ட போகாமுல கேன, முடிக்குரிய வினிவேகெறவெலபில்லெவவும் கெற்றகாகும்புறவும் பிறவும்; மேற்கு-முடிக்குரிய வினிவேகெறவெல பில்லெவவும் கொற்றகாகும்புறவும் பிறவும், கிந்தமடக் கிராம எல்லை.

*இங்கிலீசின் நான்காம் பாகம் 1287 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Kurunegala S. O. 228, 1912—1913.]

---

[Kurunegala Notice No. 4,996.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டௌ உரித்துப்பேசுவோர்கள் யாரு மிருந்தால், அவர்கள் 1913 ம் ஸு (செப்றெம்பர்) புரட்டாதிமீ 5 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தி யோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முக முகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப் படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்து வார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விபரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிரியாலேகாற்பற்றைச்சேர்ந்த இகாலவிசிடெகேக் கோறளேயில் பன் னல என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனணேக்கப்படும் *படப்பிரதியில் விபரித்தபடியே 4 பேட்சு விசாலமுடையதும், 69 ம் பிரதமபடத்தில் 360*a*'ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதும் சாமானியமாய் பாற (பெரிய தெருவுக்குச் சேமிக்கப் பட்ட சிலம்) என்னும் பெயரினுல் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டுவருவதுமான காணி. இதற்கெல்லைகளாவன : வடக்கு-முடிக்குரிய கல்கந்தேகேன (பிரதம படம் 1,695/I 713); கிழக்கு-தம்பளேயிலிருந்து குருநாக்கலுக்குப் போகும் பெரிய தெரு; தெற்கு-முடியால் விற்கப்பட்ட றதகொற்றுவபில்லெவ; மேற்கு-முடியால் விற்கப்பட்ட றதகொற்றுவ கேன.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 1288 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Kurunegala S. O. 229, 1912—1913.]

---

[By-law relating to dust, ashes, sweepings, and refuse, made by the Local Board of Ratnapura.]

இத்தால் விளம்பரப்படுத்துவது என்னவாகில்:—இலங்கை அரசாட்சி பரிபாலனம்பண்ணிவரும் உத்தியோ கஸ்தரானவர், "1898 ம் ஆண்டின் சுகாதார சுவஸ்தான சங்கத்தைப்பற்றிய சட்டத்" தின் 56 ம் 57 ம் பிரிவுகளின்படி, இரத்தினபுரிச் சுகாதார சங்கத்தாராற் செயப்பட்டு, மேற்படி சட்டத்தின் 13 ம் அதிகாரத்து D அட்டவணையின் உள்ள 6 ம் இலக்க உபவிதிக்குப் பதிலாக, வைத்த இதன்பின்வரும் உபவிதியை, அதிகார மந்திர சபையாரது ஆலோசனே யோடு, பெலப்படுத்தச் சித்தமாயினுர் என்பதேயாம்.

உத்தமஞர் கட்டளேப்படி,

கொழும்பிற் கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
1913 ம் ஸு செப்றெம்பர்மீ 4 ந் வு.

எல். டபிள்யு. பூத்,
அக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

மேற்சுட்டிய உபவிதி.

தங்கள் வீடுவாசல் கொல்லே முற்றங்களிலிருந்து கூட்டிப்பெருக்கிய தூசு, சாம்பல், கஞ்சல், குப்பை முதலானவை களேச் சுகாதார சங்கத்துக் குப்பைவாரிக் கூலியாட்களேக்கொண்டு அப்புறப்படுத்த விரும்பும் சகல வீட்டுக்காரர்களும் பிறரும், சங்கத்தாரது சம்மதம்பெற்ற தகுந்த பெட்டிகளிலாவது வேறு கொள்கலங்களிலாவது போட்டு, தங்கள் உறைவிடங்களுக்கு அல்லது சாப்புக்கடைகளுக்கு வெளியே தெரு ஓரத்திலே நாள்தோறும் காலே 6 மணிக்கும் 8 மணிக் கும் இடையே வைத்துவிடக்கடவர். மேற்சொன்னபடியான பெட்டிகளிலாவது வேறு கொள்கலங்களிலாவது அல் லாமலும், குறித்த மணி நேரத்தின்பின்னும், எந்தத் தெருவிலாயினும் தூசு, சாம்பல், கஞ்சல், குப்பை முதலியவைகளே எவரொருவரும் வைப்பது அல்லது வைப்பிப்பது, கியாயமுறையாக மாட்டாது. அப்படிப்பட்டவர் ஒவ்வொருவரும், அந்தப் பெட்டிகளே அல்லது வேறு கொள்கலங்களே, குப்பைவாரிக் கூலியாட்கள் அவைகளிற் போட்டிருந்த குப்பை முதலானவைகளே எடுத்துக்கொண்டுபோனபிறகு, அரை மணித்தியாலத்திலுள்ளே திரும்ப எடுத்துப்போடக்கடவர்.

[Tenders for the Transport of Salt to Udappu.]

**1913** ம் ஆண்டு ஐப்பசிமீ **12** ந் தேதி துவங்கி **1914** ம் ஆண்டு சித்திரைமாதம் **30** ந் தேதிவரைக்கும் மீனுணர்த்துங் காலங்களில் புத்தளம் உப்புக் குதங்களிலிருந்து உப்பு ஏற்றுமதிபண்ணிக் கொண்டுபோய் உடப்பு குதத்துக்கு நிறுத்து நிறைத்துக் கொடுக்கிறதற்கென்று மேல் உரையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றுத்துரையவர்களால் **1913** ம் ஆண்டு புரட்டாதிமாதம் **25** ந் தேதி, பகல் **1** மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விக்காரன் இதன்பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டும் :—

(*a*) கேள்விக்காரன் **1913** ம் ஆண்டு புரட்டாதிமாதம் **24** ந் தேதிக்கு முன்னே புத்தளம் கச்சேரியில் ரூபாய் **5** (ஐந்து) கட்டவேண்டும். நியமிக்கும் ஞாயமான நாளைக்குள் பொருத்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினால் இந்தக்கட்டின பணம் கொவற்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும்.

(*b*) கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோந்த வருமான விசாரணைத் தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றுத்துரையவர்களுக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தவ்வால்,வளியாக அனுப்பவேண்டும்.

(*c*) கொந்தீஸ் அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்விக்காரர் தங்களுடைய பெயரையும் தாங்களிருக்கு மிடத்தையும் புத்தளத்தில் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

(*d*) புத்தளத்திலிருந்து **280** அந்தர் உப்பு ஏற்றி உடப்புக்குப்போகும் ஒவ்வொரு போட்டுக்கும் என்ன கூலியென்று கேள்விக்காரர் காட்டியிருக்கவேண்டியது.

இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விளம்பரங்களை உப்புத்துரையவர்களிடம் வினவி அறிந்துகொள்ளலாம்.

சி. குமாரசுவாமி,
உதவி ஏசன்றுத்துரைக்காக.

புத்தளம் கச்சேரி,
**1913** ம் ௵ புரட்டாதிமீ **1** ந் தேதி.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.